[2017 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கேட்டது சரி. அதற்குண்டான பதிலைச் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு) அதற்கு பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

(ஆ) குடியரசு தின விழா அழைப்பிதழ் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த குடியரசு தின விழாவிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்முறையாக கொடியேற்றியிருக்கிறார்கள். ஆனால், இந்த விழாவிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எங்களது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் வழங்கப்படவில்லை. (குறுக்கீடுகள்)*

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைப்பற்றி என்னவென்று விசாரிக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி*, *அது சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியில்லை. அது அரசு சார்பாக நடந்திருக்கிறது. அதுகுறித்து என்னவென்று விசாரித்து சொல்கிறேன். (குறுக்கீடுகள்) விசாரித்து சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. இராமசாமி அவர்கள் வைத்த கோரிக்கைக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் கேட்ட கேள்விக்கும், "யாருக்கெல்லாம் அழைப்பிதழ் அனுப்பிவைக்கப்படவில்லையோ, அதுகுறித்து என்னவென்று விசாரித்து, நான் உரிய நடவடிக்கை எடுக்கிறேன்" என்பதை என் பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார். (குறுக்கீடு) அதுகுறித்துதான் நான் பதில் சொல்லிவிட்டேனே, பிறகு என்ன? (குறுக்கீடு) பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *நான் என்னுடைய ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இதேபோல, அங்கீகரிக்கப்பட்ட*

2017 ஜனவரி 27] [திரு. கரி. இராமசாமி]

கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் நீங்கள் அழைப்பிதழ் அனுப்பி வைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். தற்பொழுது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பிவைக்கப்படவில்லை. அதற்குரிய காரணத்தையும் நீங்கள் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் விசாரிக்கிறேன் என்று சொல்லிவிட்டேன் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு)

(அ) ஜல்லிக்கட்டு தடையை நீக்கக்கோரி போராட்டம், காவல் துறை நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, உரிய பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மெரினா பீச்சில் என்ன நடந்தது என்பது குறித்து கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவிருக்கிறார்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) இரண்டே வரியிலே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்டார். (குறுக்கீடு) பொறுங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், திரு. சாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) சாமி, நீங்கள் எனக்கு பாடம் சொல்லிக்கொடுக்காதீர்கள்; எனக்குத் தெரியும், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்கள் தலைவரிடம்தான் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு) உங்கள் தலைவர் பேச ஆரம்பித்தார்; அதற்குள்ளாக காங்கிரஸ் கட்சியின் அவைத் தலைவர் பேச வேண்டும் என்று கோரினார். (குறுக்கீடு) அவர் கேட்ட கேள்விக்கும் பதில் கூறினேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பிரச்சினை குறித்து விளக்கமாக, detail ஆக சொல்லாமல், மேலோட்டமாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பதில் சொல்லச் சொல்கிறேன்.